# 18-10-2024 செய்தி

## அஸ்ஸாம் குடியுரிமை சட்டப்பிரிவு செல்லும்

- அஸ்ஸாம் மாநிலத்தில் 1966 –ஆம் ஆண்டு ஜனவரி 1 –ஆம் தேதிமுதல் 1971 –ஆம் ஆண்டு மார்ச் 25 –ஆம் தேதி வரை சட்டவிரோதமாக புலம்பெயர்ந்தவர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்க வகை செய்யும் குடியுரிமைச் சட்டத்தின் பிரிவு 6ஏ செல்லும் என்று உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு தீர்ப்பளித்தது.
- இதன்மூலம் 1971 –ஆம் ஆண்டு மார்ச் 25 –ஆம் தேதிக்கு முன்பாக அஸ்ஸாம் மாநிலத்துக்குப் புலம் பெயர்ந்து குடியிருந்து வருபவர்கள் இந்திய குடியுரிமையைப் பெற முடியம் என்பதை உச்சநீதமன்றம் உறுதி செய்துள்ளது.
- அஸ்ஸாமுக்கு சட்டவிரோதமாக புலம் பெயர்ந்தவர்களில் பெரும்பாலானோர் வங்கதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.
- 1971 –ஆம் ஆண்டு இந்தியா–பாகிஸ்தான் போரின்போது வங்கதேசத்திலிருந்து வெளியேறிய மக்கள் அஸ்ஸாம் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களில் தஞ்சமடைந்தனர். இதன் காரணமாக அஸ்ஸாம் மாநிலத்தில் பல்வேறு வன்முறை சம்பவங்கள் நிகழ்ந்தன.
- அதைத் தொடர்ந்து, வெளிநாட்டினரை அடையாளம் கண்டு அவர்களுடைய நாட்டுக்குத் திருப்பி அனுப்புவது தொடர்பாக அப்போதைய பிரதமர் ராஜுவ் காந்தி தலைமையிலான மத்திய அரசு 1985 –ஆம் ஆண்டில் அஸ்ஸாம் மாணவர்கள் சங்கத்துடன் ‘அஸ்ஸாம் ஒப்பந்தம்’ என்ற உடன்பாட்டை மேற்கொண்டது.
- அந்த ஒப்பந்தத்தின்படி, இந்திய குடியுரிமைச் சட்டத்தில் ‘6ஏ’ என்ற புதிய பிரிவு இணைக்கப்பட்டது.
- இந்தச் சட்டப் பிரிவு, 1966 –ஆம் ஆண்டு ஜனவரி 1 –ஆம் தேதி முதல் 1971 –ஆம் ஆண்டு மார்ச் 25 –ஆம் தேதி வரை அஸ்ஸாமில் சட்ட விரோதமாக புலம்பெயர்ந்தவர்களுக்கு, குறிப்பாக வங்கதேசத்திலிருந்து புலம்பெயர்ந்தவர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்க வகை செய்கிறது.
- இந்த ‘6ஏ’ சட்டப் பிரிவின் செல்லும் தன்மை குறித்து கேள்வி எழுப்பி உச்சநீதிமன்றத்தில் ஏராளமான மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.
- இந்த மனுக்களை உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், நீதிபதிகள் சூரியகாந்த், எம்.எம்.சுந்தரேஷ், மனோஜ் மிஸ்ரா, ஜே.பி.பார்திவாலா ஆகியோரை உள்ளடக்கிய நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு விசாரித்தது.
- வழக்கு விசாரணையின் போது, ‘அஸ்ஸாம் மாநிலத்துக்குள் சட்ட விரோதமாகக் குடியேறிய வங்க தேசத்தினர் மாநிலத்தின் மக்கள் தொகை அமைப்பு மற்றும் கலாச்சாரத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும், அவர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்குவது, அரசமைப்பு சட்டப் பிரிவு 29(1) –ஐ மீறுவதாகும்’ என்று மனுதாரர்கள் தரப்பில் வாதிடப்பட்டது.

**இரு மாறுபட்ட தீர்ப்புகள்:**

- ‘இந்திய குடியுரிமைச் சட்டப் பிரிவு 6ஏ செல்லும்’ என்று தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், நீதிபதிகள் சூரியகாந்த், எம்.எம்.சுந்தரேஷ், மனோஜ் மிஸ்ரா ஆகியோர் ஒருமித்த தீர்ப்பை அளித்தனர்.
- ஆனால் ‘6ஏ சட்டப்பிரிவு அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது’ என்று நீதிபதி ஜே.பி.பார்திவாலா தீர்ப்பளித்தார். குறிப்பிட்ட தேதிக்கு முன்பாக அஸ்ஸாமில் புலம்பெயர்ந்ததாக போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து மோசடியில் ஈடுபட இந்தச் சட்டப்பிரிவு வழிவகுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.
- தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் எழுதிய தீர்ப்பில், நிலப்பரப்பு மற்றும் வெளிநாட்டினரை அடையாளம் காணும் விரிவான நடைமுறைகள் அடிப்படையில் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும் போது, அஸ்ஸாமில் புலம்பெயர்ந்தவர்கள் வருகை அதிகமாகவே உள்ளது.
- அதே நேரம், மனுதாரர் குறிப்பிட்டுள்ளது போன்று, ஒரு மாநிலத்தில் பல்வேறு இனக்குழுக்கள் இடம்பெறுவதால்; பாரம்பரிய இன மக்களின் மொழி, நம்பிக்கை, கலாச்சார உரிமைகளைப் பாதுகாக்கும் அரசமைப்பு சட்டத்தின் 29(1) பிரிவு மீறப்படுவதாகக் கருத முடியாது. அவ்வாறு மாநில பாரம்பரிய இன மக்களின் உரிமைகள் பாதிக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் எதையும் மனுதாரர் சமர்ப்பிக்கவில்லை.

## கீரிடம், அரசியல் சாசன புத்தகத்துடன் புதிதாக வடிவமைக்கப்பட்ட நீதி தேவதை சிலை

- நீதிதேவதை சிலையில் கண்கள் கட்டப்பட்ட கருப்புத்துணி, கையில் இருந்த வாள் நீக்கப்பட்டு, கீரிடம் மற்றும் அரசியல் சாசன புத்தகத்துடன் புதிதாக வடிவமைக்கப்பட்ட நீதி தேவதை சிலை சுப்ரீம் கோர்ட்டில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

**நீதிதேவதை சிலை**

- ஆங்கிலேயர் ஆட்சி காலத்தின் போது, சுப்ரீம் கோர்ட்டில் நீதி தேவதை சிலை நிறுவப்பட்டது. அந்த நீதி தேவதை சிலையின், கண்கள் கருப்பு துணியால் கட்டப்பட்டும், இடது கையில் தராசு, வலது கையில் இருக்கும்படி அமைக்கப்பட்டு இருந்தது.
- பாகுபாடு பார்த்து நீதி வழங்காமல் இருக்கவும், சரிசமமாக எடை போட்டு சரியான தீர்ப்பை வழங்க வேண்டும் என்பதையும், அநீதியை வீழ்த்த வாள் இடம் பெற வேண்டும் என்பதை குறிக்கும் வகையில் இந்த நீதி தேவதையின் சிலை வடிவமைக்கப்பட்டது.

**புதிய வடிவமைப்பு**

- இந்நிலையில், நீதி தேவதையின் சிலையில் சில மாற்றம் செய்து சுப்ரீம் கோர்ட்டில் உள்ள நூலகத்தில் வைக்கப்பட்டு இருக்கிறது. அதாவது நீதி தேவதையின் புதிய சிலையில், கண்களில் கருப்புத்துணி இல்லை. அதேபோல் வலது கையில் வைக்கப்பட்டிருந்த வாளுக்கு பதிலாக அரசியல் சாசன புத்தமும் இடம்பெற்றுள்ளது.
- மேலும் இந்த புதிய சிலையானது, தலையில் கீரிடம், நெற்றி திலகத்துடன் இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இந்த புதிய நீதி தேவதை சிலை, சுப்ரீம் கோர்ட்டில் உள்ள நூலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதனை சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திர சூட் திறந்து வைத்தார்.

**அனைவருக்கும் சமம்**

- இந்த புதிய சிலை சொல்லும் செய்தி குறித்து வெளியான தகவலில் "சட்டம் ஒருபோதும் குருடாகாது. அது அனைவரையும் சமமாக பார்க்கிறது என்பதை வலியுறுத்தி நீதி தேவதையின் கண்கள் திறக்கப்பட்டுள்ளது. மேலும், இந்தியாவின் சட்டங்களின்படி நீதி வழங்கப்படுகிறது என்பதை வலியுறுத்தும் வகையில், நீதி தேவதையின் வலது கையில் இடம் பெற்றிருந்த வாளுக்கு பதிலாக, அரசியலமைப்பு புத்தகம் இடம் பெற்றுள்ளது என கூறப்பட்டுள்ளது.

## அணு ஆயுத அச்சுறுத்தலும் அமைதிப் பரிசும்

- சமகால நிகழ்வுகளுடனான பொருத்தப்பாட்டுடன் அமைந்துவிடும். அங்கீகாரங்கள் மதிப்பு மிக்கவை. அந்த வகையில், அணு ஆயுதத் தாக்குதல் பதற்றம் அதிகரித்திருக்கும் இன்றைய சூழலில், அணு ஆயுதங்களுக்கு எதிராகப் போராடிவரும் 'நிஹான் ஹிடாங்க்யோ' என்னும் ஜப்பானிய அமைப்பினருக்கு அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டு இருப்பது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.
- அணு ஆயுதம் இல்லா உலகம் என்னும் இலக்கை எட்டுவதற்காக உழைத்துவரும் இந்த அமைப்பில் அங்கம் வகிக்கும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர், ஹிரோஷிமா, நாகசாகி நகரங்கள் மீது அமெரிக்கா நிகழ்ந்து அணுகுண்டுத் தாக்குதலில் எப்படியோ உயிர் பிழைத்தவர்கள். அணுகுண்டுக் கதிர்வீச்சு காரணமாக உடல் ரீதியாக ஏராளமான பாதிப்புக்குள்ளான இவர்கள் 'ஹிபாகுஷா' என்னும் பெயரில் விளக்கப்படுகின்றனர்.

**இரக்கமற்ற தாக்குதல்**

- இரண்டாம் உலகப் போரின்போது முக்கிய எதிரியான ஜெர்மனியைவிடவும் அமெரிக்காவின் கணக்கை உறுத்திக்கொண்டிருந்த நாடு ஜப்பான் தான்.
- அணுகுண்டு வீசித் தாக்குதல் நடத்தும் அளவுக்கு ஜப்பான் மீது அமெரிக்கா வஞ்சம் வைக்க பேர்ல் ஹார்பர் மீதான அதிரடித் தாக்குதல் ஒரு காரணம்.
- அத்துடன், ஒரு காலத்தில் தனது மறைமுக உதவியைப் பெற்று வளர்ந்த ஜப்பான், ஆசியாவில் தனக்கு வணிகப் போட்டியாளராக உருவெடுத்ததும் அமெரிக்காவின் ஆத்திரத்துக்கு ஒரு காரணமாகச் சொல்லப்படுகிறது.
- 1945 ஆகஸ்ட் 6 இல் ஹிரோஷிமா மீது, 'லிட்டில் பாய்' என்கிற அணுகுண்டும், ஆகஸ்ட் 9 இல் நாகசாகி மீது 'ஃபேட்மேன்' என்கிற அணுகுண்டும் வீசப்பட்டன. இரு நகரங்களிலும் தலா 12 லட்சத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.
- அந்த அணுகுண்டுகளின் கதிர்வீச்சு காரணமாக ஏற்பட்ட பல்வேறு பாதிப்புகளால் இதுவரை 4 லட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கிறார்கள்.

**முடக்கப்பட்ட குரல்கள்**

- இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், மறுகட்டமைப்பு என்ற பெயரில் 1945-1952 காலகட்டத்தில் ஜப்பானில் அமெரிக்காவின் ஆதிக்கம் வியாபித்திருந்தது.
- எப்போது அணுகுண்டு வீச்சுப் பாதிப்பு குறித்துப் போவே ஹிபாதுஷாக்களால் இயலவில்லை.
- கூடவே, புற்றுநோய், தோல் நோய்கள், கருச்சிதைவு, சிசு இறப்பு என ஏராளமான பாதிப்புகளுக்கு ஆனான அவர்களும் அவர்களது சந்ததியினரும் சமூகரீதியிலான புறக்கணிப்பையும் எதிர்கொள்ள நேர்ந்தது.

- திருமண உறவு முதல் வேலைவாய்ப்பு வரை பல்வேறு தளங்களில் அவர்களில் பலர் ஒதுக்கிவைக்கப்பட்டனர்.
- 1956 இல் ஹிபாருஷாக்கள் ஒருங்கிணைந்து தங்கள் கனத்த மௌனத்தைக் கலைத் தளர நிஹான் ஹளிடாங்க்யோ அமைப்பை நிறுவி, அணு ஆயுதங்களுக்கு எதிரான உலகளாவிய அறப்போரைத் தொடங்கினர்.
- இந்த அமைப்பின் முயற்சியால் அணு ஆயுதம் தொடர்பான விழிப்புணர்வு உலக நாடுகளிடம் பரவலாக்கப்பட்டது.

**சமூகாலச் சூழல் மீதான பார்வை:**

- அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது தொடர்பாகப் பேசிய நிஹான் ஹிடாங்க்யோ் அமைப்பின் தலைவர் தொஷியுகி மிமாகி, காஸாவில் அமைதியை நிலைநாட்டப் போராடுபவர்கள் இந்த விருதை வென்றிருக்க வேண்டும் எனக் கூறியிருப்பது.
- இந்த அமைப்பின் உன்னதநோக்கத்துக்கு ஒரு சான்று. காஸாவில், உடலெங்கும் ரத்தம் வழியும் குழந்தைகளை அவர்களின் பெற்றோர்கள் தங்கள் கைகளில் ஏந்தியிருக்கும் காட்சிகள் 80 ஆண்டுகளுக்கு முந்தைய ஜப்பானில் காட்சிகளைத் தனக்கு நினைவூட்டுவதாகக் கண்ணீருடன் தெரிவித்திருக்கிறார் மிமாகி.
- உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் காஸா மீதான இஸ்ரேலின் போர் என இரண்டு போர்கள் நிகழ்ந்துகொண்டிருக்கும் இன்றைய சூழலில், அணு ஆயுத அச்சுறுத்தல்கள் அதிகரித்திருக்கின்றன.
- உக்ரைனில் மட்டுமல்லாமல், ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் அணு ஆயுதத் தாக்குதல்கள் நடத்தப்படும் என்று எச்சரித்திருக்கும் ரஷ்ய அதிபர் புடின், அணு ஆயுதத் தாக்குதல் நடத்தப்படும் என்று மிரட்டிவருகிறார்.
- ஹிஸ்புல்லா அமைப்பினர் மீதான இஸ்ரேலின் தாக்குதல்களால் ஆத்திரமடைந்திருக்கும் ஈரான் மேலும் சினம் கொண்டு அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபடலாம் என்ற அச்சமும் பரவலாக எழுந்திருக்கிறது.
- ஈரானின் ஏவுகணைத் தாக்குதல்களுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில், அந்நாட்டில் அணு உற்பத்தி மையங்கள், எண்ணெய் உற்பத்தி மையங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தலாம் எனக் கூறுப்படுகிறது. இதற்கு அமெரிக்க முன்னாள் அதிபர் டிரம்ப் தூபம் போடுவது கவனிக்கத்தக்கது.

**குலைந்துபோன நம்பிக்கை**

- ஈரானின் அணு ஆயுத உற்பத்தியைத் நடைசெய்வதை முதன்மை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஈரான் அணு ஒப்பந்தம் ஒபாமா ஆட்சிக் காலத்தில் 2015இல் கையெழுத்தானது.
- அமெரிக்காவுடன் ரஷ்யா, சீனா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகளும் ஈரானுடன் இந்த ஒப்பந்தத்தை மேற்கொண்டன.
- ஆனால், ஆரம்பம் முதலே இந்த ஒப்பந்தத்தை எதிர்த்து வந்த டிரம்ப், வரலாற்றிலேயே மிக மோசமான ஒப்பந்தம் என அதிபர் தேர்தலுக்கான பிரச்சாரங்களில் முழங்கினார்.
- ஈரானுடனான அணு ஆயுத ஒப்பந்தம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டிருந்தால் சர்வதேச அளவில் பல்வேறு பிரச்சினைகள் நடைபெறாமல் தடுக்கப்பட்டிருக்கும்.
- ஈரான் அரசின் ஆதரவுடன் இயங்கும் ஹமாஸ் அமைப்பு, இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தும் அளவுக்குச் சென்றிருக்காது என ஒபாமா ஆட்சியின்போது துணைப் பாதுகாப்பு ஆலோசகராக இருந்த பெஞ்சமின் ஜே. ரோட்ஸ் சுட்டிக்காட்டியிருக்கிறார்.
- ஹிரோஷிமா, நாகசாகி பேரறிவுக்குப் பிறகு உலகின் எங்கும் அணு ஆயுதத் தாக்குதல் நடைபெறவில்லை என்றாலும் அணு ஆயுத நாடுகள் அவற்றை நவீனப்படுத்துவதில் ஆர்வம் செலுத்துவதாகவும், வேறு பல நாடுகளும் அணு ஆயுத நாடுகளின் பட்டியிலில் இடம்பெற முயன்றதாகவும் நோபல் பரிசுக் குழு கவலையுடன் தெரிவித்திருக்கிறது.
- போரில் ஈடுபடும் நாடுகளைத் தார்மீகரீதியல் கண்டிப்பதைத் தாண்டி, அவற்றின் மீது உறுதியான நடவடிக்கை எடுக்கும் நிலையில் ஐநா அவை ஆயுதங்களைத் தயாரிக்கவோ, அணு ஆயுதங்களைச் தயாரிக்கவோ வேண்டிய நிலையில் பல நாடுகள் இருக்கின்றன.
- இப்படி அணு ஆயுதம் தொடர்பான சர்ச்சைகள், போர்ச் சூழல் இன்று உயீர்ப்புடன் இருக்கம் நிலையில்தான், ஹிபாகுஷாங்களுக்கு அமைதி நோபல் பரிசு அறிவிக்கப்பட்டிருங்கள்.
- நாங்கள் உயிருடன் இருக்கும்போதே அணு ஆயுதங்களை ஒழித்துவிடுங்கள் என ஹான் ஹிடாங்கயோ அமைப்பின் தலைவர் மிகாகி உருக்கமாக வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.
- குழந்தைகள் மீதும், மருத்துவமனைகள் மீதும் ஏவுகளை வீசிப் படுகொலை செய்யத் தடங்காத நாடுகள், சர்வதேச அளவில் துணிச்சலுடன் வரும் நிலையில், மனித குலத்தின் அடிப்படை விழுமியங்களைக் கைவிடாமலிருக்க கோரும் இதுபோன்ற இறைஞ்சல்கள் செவிமடுக்கப்படுமா என்ன?